**<u>09.08.2024 அ.வ.எண்.56/2015 பி.வா.சா.1, அப்துல் முணாப் த/பெ. சையது ஜானி சாய்பு</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

குன்னா சாய்பு என்ற சம்ஷேர் அலி சாய்பு என்பவருக்கு புல எண்.406/1-ல் 8-3/4 செண்ட் சொந்தமானது என்பது சரிதான். மேற்படி குன்னா சாய்புவின் மகன்களில் ஒருவர்தான் அலிஜான் சாய்பு என்பது சரிதான். அவர் இறந்துவிட்டார். புல எண்.406/1-ல் இருந்த மொத்த விஸ்தீரனத்தையும் என் தாயார் கிரயம் வாங்கவில்லை அது 4 நபர்களுக்கு சொந்தமாக இருந்தது அவர்களில் மூன்று நபர்களிடமிருந்து என் தாயார் கிரயம் வாங்கினார். அவ்வாறு என் தாயார் கிரயம் வாங்கியது 8177 சதுர அடி ஆகும். மேற்படி புல எண்ணில் ஆக வடபுறம் உள்ள பகுதியும் என் தாயாரின் கிரயத்தில் கட்டுப்பட்டதாகும். புல எண்.406/1-ன் வடபுற கிழமேல் நீளம் சுமார் 55 அடி ஆகும். அந்த வடபுற எல்லையில் என் தாயார் கிரயம் வாங்கியபோது ஒரு பழங்கால வீடு இருந்தது என்றால் அந்த வீடு என் தாயார் கிரயம் வாங்கிய காலத்தில் இடிந்து தரைமட்டமானதாக இருந்தது. அந்த வீடு நல்ல நிலையில் இருந்தபோதுதான் மேற்படி குன்னா சாய்பு அந்த வீட்டில் வசித்தார் என்றால அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் அந்த வீட்டிற்கு கிழக்கு புறம் இருந்த வீட்டில் மேற்படி குன்னா சாய்பு வசித்தார். அந்த வீட்டில் குன்னா சாய்பு-ன் வாரிசுகள் வசித்தனர் என்றால் இல்லை அவர்கள் வேறு வீட்டில் வசித்தார்கள். அலிஜான் சாய்பு எங்கு வசித்தார் என்பது ஞாபகமில்லை. குன்னா சாய்பு இறந்தபிறகு அவர் வசித்த கிழக்கு பக்க வீட்டில் அவர் மகன் அலிஜான் சாய்பு வசித்தார் என்றும் அந்த விவரத்தை மறைப்பதற்காக எனக்கு ஞாபகமில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. அலிஜான் சாய்பு-ற்கு மொத்தம் ஐந்து பிள்ளைகள். அவர்கள் வாதிகளும் 2,3 பிரதிவாதிகளும் என்பது சரிதான். அலிஜான் சாய்பு வாதிகள் சிறுவயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார் என்றால் அது விவரம் ஞாபகமில்லை. இடிந்து போன வீட்டிற்கு அடுத்த மேற்கில் பர்கத் அலி சாய்பு வசித்தார் அந்த வீட்டிற்கு மேற்கில் எங்களுக்கு சொந்தமான வேறொரு மனையில் தற்போதும் நான் வசித்துவருகிறேன். கடந்த 40 ஆண்டிற்கு மேலாக அந்த வீட்டில் வசித்து வருகிறேன். குன்னா சாய்பு வசித்த கிழக்குபுற வீட்டின் வடபுற கிழமேல் அளவு 9 அடி ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

ஒத்திவைக்கப்படுகிறது.